<u>**DEPOSITION OF WITNESS**</u>

<u>**(Chapter XXIII Code of Criminal Procedure)**</u>

<u>**IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE OF CHENGALPATTU**</u>

| SESSIONS CASE No. | 35 | of | 2016 |
|---|---|---|---|

| Deposition of Witness for | Prosecution | PW | 1 | Defence | DW | | Court | CW | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

| பெயர் | கலைவாணி | வயது | | இனம் | |
|---|---|---|---|---|---|
| தகப்பனார் /கணவர் பெயர் | சம்பத் | | | தொழில் | |
| கிராமம் /முகவரி | | | | மதம் | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the 07th day of April 2026

நாள் :- 07.04.2026 அ.சா.1 (எதிரிகள் 1, 2, 4 ஆஜர் )

<u>**முதல் விசாரணை**</u>

நான் மணமை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் இந்து ஆதி திராவிடர் வகுப்பை சேர்நதவர். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 11.09.2010 அன்று இரவு சுமார் 9 மணியளவில் கிருஷ்ணமூர்த்தி என்பவருடைய திருமணத்திற்காக என் கணவர் சம்பத் இருசக்கர வாகனத்தில் சென்றார். அப்போது என் கணவருக்கு முன்னால் சென்ற பேருந்து இடித்து இருசக்கர வானத்தில் சென்ற பொன்னுசாமி மற்றும் அவருடைய மனைவிக்கு அடிபட்டது. உடனே என் கணவர் 108 ஆம்புலன்சுக்கு போன் செய்து வரசொன்னார். என் கணவர் அடிப்பட்டவர்களை ஆம்புலன்சில் ஏற்றினார். காயம்பட்டவர்கள் நாயக்கர் வகுப்பை சேர்ந்தவர்கள். ஆஜர்

எதிரிகள் அப்போது " நீ என்னடா, பற நாயே, எங்கள் ஜாதியை சேர்ந்தவர்களை தொட்டு தூக்குவது" என்று திட்டி அடித்து அருகிலிருந்த கழனிக்கு இழுத்து சென்றுவிட்டார்கள். அங்கே என் கணவரை கல், கட்டை போன்றவற்றால் அடித்து காயப்படுத்தி, கிணற்றில் தூக்கி போட்டுவிட்டு இறந்துவிட்டார் என்று எண்ணி அங்கிருந்து சென்றுவிட்டார்கள். அதன் பிறகு என் வீட்டின்அ ருகில் இ ருப்பவர்கள் சொன்ன தகவலின் பேரில் நான் சம்பவ இடம் சென்றேன். அங்கு ஆஜர் எதிரி பொன்னுரங்கம், என் கணவர் பற நாய், செத்துவிட்டான் என்று சொல்லி இனிமேல் பற நாய்கள் யாரும் என்னிடம் வரமாட்டீர்கள் என்று சொல்லி சென்றுவிட்டார். அதன் பிறகு சட்ராஸ் காவல் நிலையத்திற்கு சென்று நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் நான் கொடுத்த புகார் அ.த.சா.ஆ-1 ஆகும். அதன் பிறகு என் கணவரை செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சைக்காக சேர்த்தேன். புகாரில் என்னுடைய கணவரின் இருசக்கர வாகனம், நகை மற்றும் பணம் ரூ.2000 காணவில்லை என்பதை புகாரில் குறிப்பிட்டிருந்தேன். பின்னிட்டு இருசக்கர வாகனம் கிடைத்துவிட்டது, இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)</u>**

ஆஜர் எதிரிகளை தெரியும். நான் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். இரவு 9.15

மணிக்கு நான்  தகவல் கிடைத்து உடனே சம்பவ இடம் சென்றேன்.   செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு இரவு 11 மணிக்குள் சென்றுவிட்டோம்.  சம்பவம் நடந்த பிறகு நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்துவிட்டு அதன் பிறகு  தான்  என் கணவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றேன்.   நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சம்பவத்தை  நான் நேரில் பார்க்கவில்லை. ஆனால் பின்னிட்டு நான் தகவலின் பேரில் சம்பவ இடம் சென்ற போது,  அங்கு ஆஜர் எதிரி பொன்னுரங்கம், என் கணவர் பற நாய், செத்துவிட்டான் என்று  சொல்லி இனிமேல் பற நாய்கள் யாரும் என்னிடம் வரமாட்டீர்கள் என்று சொல்லி சென்றுவிட்டார்.   இது என் முன்னால் நடந்தது.   நானும் என் ஊர்க்காரர்களும்  சேர்ந்து என் கணவரை  மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். என் கணவர்,  அடையாளம் தெரியாத 30 நபர்கள் தன்னை தாக்கிவிட்டதாக மருத்துவரிடம் சொல்லியுள்ளாரா என்றால் அது பற்றி தெரியவில்லை. நான் முதல் விசாரணையில் சொன்னவாறு சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.   வழக்கிற்கும் எதிரிகளுக்கும் இடையில் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.   கிராமத்தில் உள்ள அரசியல் கட்சிகளின் வற்புறுத்தலின் பேரில் பொய் புகார் கொடுத்து தற்போது அவர்களின்  தூண்டுதலின் பேரில்  பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :-</u>**

இல்லை

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu